# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 3684 / 2014 / எம்சி. 8 நாள் : 19.05.2014**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் **23.05.2014** வெள்ளிக்கிழமை காலை **10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம் - மே 2014

## நிகழ்ச்சி நிரல்

<table>
<tr><th colspan="2">பொருளடக்கம்</th></tr>
<tr><td colspan="2">அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</td></tr>
<tr><th>வ.எண்</th><th>இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்</th></tr>
<tr><td>1</td><td>நடந்துமுடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2014-ல், மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் 37 தொகுதிகளில் மகத்தான வெற்றி பெற்று சரித்திர சாதனை படைத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்களுக்கு வாழ்த்து தெரிவித்தல் - சிறப்புத் தீா்மானம் நிறைவேற்றுதல் - தொடா்பாக</td></tr>
</table>

**அ) <u>திருக்குறள்</u>**

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

**(குறள் - 631)**

**<u>விளக்கம்</u>**

செயத்தக்க அரிய வினைகளை ஆய்ந்து, செய்யும் வகையறிந்து, தக்கவரைக் கொண்டு காலத்தால் செய்து முடிக்கும் திறன் மாண்ட புகழ்தரும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

அமைதி, வளம், வளர்ச்சி என்னும் சீர்மிகு குறிக்கோள்களுடன் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடச்செய்து, பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கி அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய மக்கள் பணிகள் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இருந்த காரணத்தால் நடந்துமுடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2014-ல், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் 37 மக்களவை தொகுதிகளில் மகத்தான வெற்றி பெற்று சரித்திர சாதனை படைத்துள்ளது.

இம்மாபெரும் சரித்திர வெற்றிச் சாதனையினை நிகழ்த்திக் காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தின் சார்பாக இதயப்பூர்வமான வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்து சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுதல்.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 23.05.2014**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி